
உ

கணபதி துணை

திரு இலஞ்சி முருகன் உலா

காப்பு

(வெண்பா)



1. ஏர்கொண்ட தென்னிலஞ்சி யீசன் குரபரன்மேற்
சீர்கொண் டுலாமாலை சேர்க்கவே - நார்தருமால்
ஐந்துகர நால்வாய்மூன் றானவிழி யோரிருதாள்
எந்தை யொருமருப்ப னே

2. ஒண்டா மரைமலர்த்தாள் வேல னுலாத்தமிழ்க்குத்
தண்டா மரையாள் தமிழ்முனிவன் - பண்டருமோர்
அப்பன் முதன்மூவ ரானதிரு வாசகத்தேன்
அப்பனுமே காப்ப ரடுத்து

நூல்
(கலி வெண்பா)
[முருகக்கடவுள் திரு அவதாரம்]

1.சீர்கொண்ட மாலுந் திசைமுகனுந் தேவர்களும்
கார்கொண்ட கந்தரனைக் கைகுவித்தே - ஏர்கொண்ட

2.நாடெங்கே யெங்கடிரு நங்கைமா ரெங்கேயெம்
வீடெங்கே யென்று மெலிவுரைப்ப - வாடுமுங்கள்

3.வாட்டங்க ளெல்லா மதலை தவிர்ப்பனென்று
நாட்டமிசை யோராறு நற்பொறிகள் - ஈட்டியே

4.அக்கினிநல் வாயுகங்கை யாம்வா கனமீதில்
உய்க்கச் சரவணத்தி னுள்ளுருவாய்த் - தக்கபுகழ்

5.ஆராறு மீன்முலைப்பா லாரவுண்டு வாழுங்காற்
சீரார் சிவபெருமான் றேவியுடன் - பேரான

6.பொய்கைக் கரையிற் புகுதுங்கான் மைந்தரைக்கண்
டைய னனுக்கிரகத் தாலெடுத்தே - மெய்யுமையாள்

7.ஈராறு காலை யிருகாலாத் தானிருவிப்
பேராத வன்பாற் பிரியமுற்றாள் - சீராளன்

8.அஞ்சுமுகம் போதாவென் றாறுமுகத் தோடெழுந்து
வஞ்சச்சூர் மாய்க்கவந்த வான்பொருளான் - தஞ்சமுற்ற

9.பின்னவர்க ளோடே பிரியமுறு மந்நாளும்
தென்னிலஞ்சி யாகச் செழித்ததலம் - மின்னயிலான்

10.வெள்ளிக் கயிலை விளையாடு மப்பொழுதும்
உள்ளக் களிப்பா லுகந்ததலம் - தெள்ளுமறைப்

11.பூமேவு நான்முகத்தோன் பொன்னிலஞ்சி யென்றுதிரு
நாமேவு வாக்கா னவின்றதலம் - காமேவு

12.கற்பகநா டாளி கருதி யிணைமலர்த்தாள்
அற்பகலு நாடி யருச்சித்துப் - பொற்புடனே

13.போற்றாரை யெங்கோன் பொருதுவெல்லப் பொன்னாட்டை
மாற்றா தடிவணங்கி வாழ்ந்திருந்தான் - ஏற்றார்வாழ்

14.குற்றால மிந்தக் குவலயத்துண் டாகுமுன்னே
பற்றா யிருந்த பழையபதி - கற்றாரோ

15.டந்நாட் கயிலைக் கயன்வருங்கால் வேதத்தின்
முன்னாம் பொருளை மொழிகென்ன - என்னாலே

16.ஊகமில்லை யையா வுனதுசித்த மென்றுரைக்கச்
சேகரத்திற் குட்டிச் சிறைப்படுத்தி - வாகயிலான்

17.அண்டபகி ரண்ட மசரஞ் சரங்களெல்லாம்
உண்டுபண்ணு முன்னே யுகந்துகந்து - பண்டதும்பு

18.கோயில் படைத்துக் குலவு மதில்படைத்து
வாயிலொரு நான்கு வகைபடைத்துத் - தாயினிலும்

19.அன்பு படைத்த வரிய குடிபடைத்தே
இன்பம் படைத்த வெழில்படைத்து - முன்பெல்லாம்

20.வாழை பலாப்படைத்து மாங்கனிகள் தேன்பிலிற்றப்
பாளைக் கமுகு பலபடைத்து - வேளையே

21.நேராம் புருடரெலா நேரிழையா ரேயிரதி
யாரா மெனவே யருள்படைத்துச் - சீரான

22. நீதிமன்னர் செங்கோ னெறிபடைத்துப் பைந்தொடிமார்
காதலுறுங் கற்புக் கதிபடைத்து - மாதங்கள்

23. மும்மழைகள் பெய்யு முறைபடைத்துப் பைங்கூழ்கள்
செம்மைபெற வோங்குந் திருப்படைத்து - மும்மைபெறத்

24. தங்கையினா லள்ளியிடா தார்பிச்சை பிச்சையென்ன
எங்கோ னிருந்து படைத்தவிடம் - மங்காத

25. தென்னிலஞ்சி யென்றாற் செழிக்கும்வள மத்தனையும்
என்னி லியம்ப வெளியதோ - மன்னு

ஆறு படைவீடுகள்

26. திருப்பரங் குன்றமற் சேரடியார் போற்றும்
திருப்பரங் குன்றாருஞ் செவ்வேள் - விருப்பான

27. சீரலைவா யாகாமற் சிந்தை நினைப்பருளும்
சீரலைவா யாளுந் திருக்குமரன் - ஆரத்

28. திருவாவி னன்குடியா மென்னச் சிறந்த
திருவாவி னன்குடிவாழ் தேவன் - பெருவாய்மை

29. ஏரகத்தா ரிவ்விடத்தா ரென்றிமையோர் தாம்புகழும்
ஏரகத் தார்வா னெழிலயிலான் - பாரகத்தில்

30. குன்றுதோ றாடுங் குலமஞ்ஞை வாகனத்தான்

குன்றுதோ றாடுங் குகப்பெருமான் - மன்றல்சேர்

31. வண்டானஞ் சோலை மலைசூ ழுலகின்மிக்க
வண்டானாஞ் சோலை மலைக்கிழவன் - கண்காதங்

32. கோராறு மோராறு மோராறு மோராறும்
ஈராறு கையு மினிதுடையான் - ஏராரும்

33. வள்ளிக் கொடிபடர வாய்த்த தனிக்கொம்பு
தெள்ளமுதத் தெய்வச் செழுங்கொடிக்கு - மெள்ளவே

34. ஏறுங் குமார விளங்கொம்பு மேற்குடைய
ஆறுடைய தென்னிலஞ்சி யாறுமுகன் - வீறியதோர்

அகத்தியர் தென்பால் வருதல்

35. தெக்கணபாற் கும்பன் றிரும்பி வரும்வழியில்
அக்கணமே விந்தா சலமடக்கி - மிக்கதொரு

36. வில்வலன்வா தாவியையும் வென்றுபுவி மீதினிலே
சொல்லரிய காவேரி தோற்றுவித்து - நல்லதொரு

[அவர் இலஞ்சியில் இருவாலுகேசரைப் பிரதிட்டை செய்து பூசித்தல்]

37. தென்னிலஞ்சி மேவிச் சிவகுருவைப் பூசித்தே
மன்னுதிரு வெண்மணலை வாணித்துச் - சென்னி

38. வணங்கிச் சிவபூசை வாய்த்ததெனப் போற்றிக்
குணங்குறிகள் காணாக் கொழுந்தை - இணங்கியே

39. பின்னு மகிழ்ந்து பிரியமுட னப்படியே
துன்னுசிவ பூசை தொடுத்தியற்றி - இந்நிலத்தில்

40. என்று மழியா தெழுபுவிக்குங் கீழ்வேராய்
நின்றநிலை கண்டு நிலைகலங்கி - அன்று

41. பெருமை யிருவரையும் பேரன்பு மொன்றா
இருவாலு கேசனென வேத்தி - அருமையாய்

42. நாதமாய் விந்துவாய் நாதவிந்து வுங்கடந்த
போதமாய் வேதப் பொருளாகிச் - சோதிபெறு

43. சுத்தவித்தை யீசுரமாய்ச் சொல்லுஞ்சா தாக்கியமாய்ச்
சத்திசிவ மானசிவ தத்துவமாய் - வித்தியா

44. தத்துவங்க ளேழுமாய்ச் சாருமறு நான்கான
சித்திபெறு மான்மதத்வச் செய்தியாய் - முத்திபெறு

45. பஞ்ச கலையாய்ப் பகர்மூல மந்திரமாய்
விஞ்சு கலாதிகளாய் மேவியே - செஞ்சொல்

46. அயனா யரியா யரியயனுங் காணா
இயலா ரிருவாலு கேசன் - நயமாய்

47. அவனவளு மல்லா லதுவுமா மெங்கோன்
இவனா மிருவாலு கேசன் - சிவமணமே

48. வீசும் படிக்கு விளங்கியதன் னான்மார்த்த
ஈசுரனை யங்க ணிருத்தியே - தேசுபெறு

[அவர் திருக்குற்றாலமடைந்து திருமாலைச் சிவபிரானாக்கல்]

49. தென்பாலே குற்றாலஞ் சென்றுதிரு மாலையவன்
அன்பாலே யென்பாலே யாகவென - முன்பாலே

50. போற்றிமகு டாகமமே பூண்டபரார்த் தப்பூசை

ஏற்றி லிருப்பவனே யென்றுதான் – சாற்றியே

[அகத்திய முனிவர் துதிசெய்தல்]

திருக்குற்றாலப் பெருமை

51. சத்தா யசத்துமாய்ச் சத்தசத்து மாகியொரு
சித்தாய் விளையாடுஞ் சீர்மழுவோய் - நித்தமாய்
52. மண்ணாகி நீராய் வசுவாகி வாயுவாய்
விண்ணாகி யோங்கும் விளக்கொளியாய்ப் – பெண்ணாகி
53. ஆணா யலியா யசரஞ் சரமாகி
ஊணாகி யுண்ணு முடலுயிராய்க் - காணாத
54. ஆதியாய்ச் சோதியா யாதியந்த மில்லாத
பூதியா யைம்முகத்துப் புத்தேளாம் - நீதி
55. வடவருவித் தீர்த்த மகிமையாய் போற்றி
திடமுடைமும் மூர்த்திசீர் போற்றி - அடலுடைய
56. தென்றலங்கால் கொண்டுபவத் தீயமறை யோன்பாவம்
அன்றுதான் போக்கு மருள்போற்றி - குன்றுசூழ்
57.வானோர் சிவத்ரோக மாய்த்தவர்கள் வீடுபெறத்
தானே யருட்கமைத்த தாள்போற்றி - கானார்
58 நரிவேட னோர்வலத்தா னாதாந்த வீடு
புரிவா யளித்த புகழ்போற்றி - கரிவிருப்பாம்
59 பூசைக்கு வீடளித்த புண்ணியா போற்றியொரு
பேசு கவிப்பன் பிழைபொறுத்துத் - தேசுபெறு
60 வீடளித்தாய் வேதியன்றன் மெய்த்தாதைக் காநரகக்
காடொழித்தாய் போற்றி கழல்போற்றி - சாடுநற
61 வுண்ட மறையோன்ற னுட்சிறந்த பாவமெலாம்
கண்டறுக்குந் தீர்த்தக் கரையானே - வண்டணுகாச்
62. சோலையாய் போற்றி துணருடைய பொன்னிதழி
மாலையாய் சித்ரசபை வாணனே - சாலப்
63. பொறுமை யருட்கடலே போற்றியென வேத்திக்
குறுமுனிவன் போற்றியகுற் றாலம் - திறமாக

முருகக்கடவுள் பெருமை

64. ஏர்வலப்பால் வாழ விருவாலு கேசுரனார்
சீரிடப்பால் வாழ்வு சிறக்கவே - ஓரிலஞ்சி
65. தன்னில் நடுவாழுஞ் சண்முகசிந் தாமணிநீள்
தென்னிலஞ்சி மேவுந் திறற்கடம்பன் - பன்னித்
66. திருமுருகாற் றுப்படையைச் செப்பியநக் கீரன்
வெருவு பயந்தவிர்த்த வீரன் - மருவாத
67. சிங்கமுக னானைமுகன் றீயவொரு சூரபன்மன்
அங்கவரை மாய்த்த வறுமுகவன் - துங்கமுறப்
68. பாடுந் திருப்புகழைப் பன்னிரண்டு நற்புயமும்
சூடுங் கருணைச் சுவாமிமிக - வாடியவப்
69. புத்தேளி ருக்கும் புரந்தரற்கும் விண்ணுலகில்
தத்தம் பதிநிலைமை தானளித்தோன் - சித்தமகிழ்ந்
70. திந்திரனார் தம்மகளை யேய்ந்துமணங் கொண்டருளிச்
சுந்தரஞ்சேர் மான்மகளாந் தோகைக்காச் - சந்திரனேர்
71. ஆறு கருணை யழகுமுகங் காட்டாமற்
கூறுமொரு வேங்கைக் குலமரமாய் வீறியே
72. நின்று வருத்தி நெடுங்குறவர் வந்தாட
அன்று வலிய வணைந்தகுகன் - சென்றுபுரி
73. தாகமார் நாரதனார் தாம்செயும்யா கத்தகரை
வாகனமாக் கொண்ட வடிவேலன் - பூகஞ்சூழ்
74. மன்னிலஞ்சி சூழ மலரிலஞ்சி யுஞ்சூழ்ந்த
தென்னிலஞ்சி வாழுந் திருக்குமரன் - என்னையே
75. ஏழு பிறப்பு மினிப்பிறவா தாளவந்து
வாழு மிலஞ்சி வடிவேலன் - ஊழிக்கும்
76. காய்த்த கருப்பிணிக்குக் கான்மருந்தா யென்றனக்கு
வாய்த்த விலஞ்சி வடிவேலன் - ஆய்ப்பாகர்
77. முன்னுங் குருவெனக்கு முக்கால முங்குருவா
மன்னு மிலஞ்சி வடிவேலன் - பொன்னுலகோர்

திருவிழா

78. பூவுலகோ ரெண்டிசையோர் பொன்மா லயனுடனே
ஏவருங் காட்சி யெமக்கென்ன - மேவியே
79. வீறுகொண்டு விண்ணேறி மேய வருவதெனக்
கூறுகொண்ட சேவற் கொடியேற்றிச் - சாறுகண்டே
80. ஆலயத்துண் மேவா வணிவிலங்கு புண்மரங்கள்
வேலையற்றுப் போற்றும் விழாவிலே - சீலத்துத்
81. தென்னனோ சோழனுடன் சேரனுமே வந்தேத்தப்
பொன்னிலத்தோர் போற்றிப் புகழ்விழவில் - மன்னுதொண்டை
82. மண்டலத்தில் வண்டூரில் வாழ்சாமி நாதனெனும்
தெண்ட னடாத்துந் திருநாளில் - எண்டிசையும்
83. கந்தசட்டி யென்று கருதுகின்ற வைப்பசியிற்
செந்தமிழோர் போற்றுந் திருநாளிற் - பந்தமற

ஆறுநாளும் கொண்டருளும் திருக்கோலங்கள்

84. வந்தொருநாள் போற்றினரை வாழரம்பை மார்தேவர்
சிந்தையொடு போற்றுந் திருநாளில் - முந்தொருநாள்
85. பங்கயத்தோ னாகிப் பருதி யணிந்தருளும்
செங்கையன்போல் நாளிரண்டிற் சேர்ந்தருளித் - திங்களணி
86. தேவ வுருத்திரனாச் சீர்மூன்றி னாலாநாள்
ஏவ லுறுதகரி லீசுரனா - ஆவலுடன்
87. விள்ளுஞ் சதாசிவமா வெள்ளிமயில் வாகனத்தில்
தெள்ளு மனுக்கிரகஞ் செய்வனெனத் - துள்ளலைபோல்
88. வாத்தியமெங் குந்தொனிப்ப வள்ளியம்மை தெய்வானை
ஏத்துதிருப் பள்ளி யெழுந்தருளி - நீத்தம்போற்

அபிடேகம் முதலியன

89. பாலாடித் தேனாடிப் பைங்கருப்பஞ் சாறாடிச்
சேலாருங் கங்கை திளைத்தாடிச் - சாலவே
90. வீறுடைய வுட்சாத்து மேற்சாத்துங் கொண்டிருக்குக்
கூறு திருப்பூசை கொண்டருளி - ஆறுதிரு
91. முண்டத்து நீறணிந்து முத்திச் சரவணமா
மண்டபத்தி லாசனத்தில் வந்திருந்தே - அண்டரெல்லாம்

92. போற்றுந் திருவாசற் பொன்னின் மணிக்கதவம்
ஏற்ற திருக்காப் பியலணிந்து - சாற்றரிய

திருவாபரணம் புனைதல்

93. பன்னிரண்டு வெய்யோர் பணிந்துசெவி சாற்றுதல்போற்
பன்னிரண்டு குண்டலமும் பார்த்தணிந்து - துன்னவே
94. கட்டுவடங் கட்டிக் காண்சன்ன வீரமிடாச்
சட்டமாக் கண்ட சரம்பூட்டி - இட்டமாப்
95. பொன்மலைக்குப் பொன்மௌி பூட்டுதல்போ லோராறு
நன்முடிக்குப் பொன்முடிக ணன்கியற்றித் - தொன்மைபெறு
96. பாற்கடலிற் றெள்ளமுதைப் பையத் திரட்சிசெய்து
கோக்கல்போற் றண்டரளக் கோவையிட்டுத் - தீர்க்கமாத்
97.தொண்டரிடத் தன்புந் தொடர்கருணை யும்பெருகி
மண்டிய மார்பில் வழிந்தவோ - மிண்டுபுரி
98. வன்சூரை மாய்த்தவந்த மாசீர்த்தி யும்விறலும்
இன்சீரோ டெய்தியவோ வீங்கென்னத் - தென்மலயம்
99. வாய்த்தவகிற் கட்டை வழங்குபனி நீர்தோய்த்துத்
தேய்த்தநறுஞ் செஞ்சாந்தின் சேறணிந் - தார்த்தெழுந்த
100. சூரன் றனைச்சயித்தே தோகையெனக் கொண்டவெற்றி
வீரமெனுந் தொங்கல் விசயமோ – வாரமதா

101. வானக் குலக்கொடிதான் வைத்தமண மாலையோ
காணக் குறத்திதருங் கண்ணியோ - தேன்மொழியார்
102. பெண்கடப்ப வோமதவேள் பேதலிக்க வோவென்ன
வண்கடப்ப மாகம் வனைந்தருளித் திண்பொன்னின்
103. மேருவினில் வெய்யோன்றன் வீற்றிருந்த தேய்ப்பவே
ஆரும் பதக்க வணிபூண்டு - சீருடனே
104. மின்னங் கொருவடிவாய் வீற்றிருந்த தொப்பவே
பொன்னகல முப்புரிநூல் பூணுவித்துத் - தன்னிகரில்
105. நல்லதரு வென்னவளர் நான்மூன்று கைகளிலும்
சொல்லரிய கங்கணங்கள் சூழ்வித்தே - எல்லவிர
106. மன்னு நவமணியால் வண்ணமுறச் செய்ததொரு
மின்னுதர பந்தனமும் வீக்கியே - சொன்னமதாற்

107. கம்மியனாற் செய்யக் கருத்தில்லா வித்தாரச்
செம்மையுறு பொன்னரைநாண் சேர்வித்து - விம்மவே
108. இட்டவிழை யாயிரம்பொ னேற்றவிலை யாமறியாப்
பட்டுடையோ டுத்தரியம் பாங்கமைத்து - மட்டிலாப்
109. பொற்சிலம்பிற் றாழ்வரையிற் பொற்றைகளை யிட்டதெனப்
பொற்சிலம்பு பொற்காலிற் பூட்டியே - நற்புகழ்சேர்
110. ஓராறு நன்முடிமே லோங்கியவான் வில்லென்னச்
சீரார் திருவா சிகைசேர்த்துப் - பேரான
111. ஆதவனோர் காற்றவிசா வன்றுநின்ற தேய்க்குமெழிற்
சீதநிலைக் கண்ணாடிச் சீர்பார்த்து - வேதமொழி
112. ஓருந் தமிழு பொருவன்மொழி வாசகமும்
பாரிற் றிருவிசைப்பா பல்லாண்டும் - சீர்சிறந்த
113. காந்தப் புராணக் கவியுந் திருப்புகழும்
சேந்தசெவிக் கொண்டருளிச் செய்தபின்னர் - பாந்தமாய்ச்

உடன்வருவோர்

114. சொன்னநிலத் தோர்களுக்காத் தூதுசென்ற தம்பியெனும்
மன்னன் றனிவீர வாகுவுடன் - பின்னவரும்
115. மற்றைய வீரர்களு மாபூதச் சேனைகளும்
கொற்றமுசு குந்தக் குரிசிலுடன் - பற்றுமனத்
116. தொண்டருடன் பத்தசனர் சொல்லரிய சீர்த்திபெறும்
அண்டருட னல்ல வடியாரும் - மண்டிவரத்
117. தென்னிலஞ்சி யாற்குச் சிவார்ச்சனைபோற் பத்திசெயும்
பொன்னுடைய புன்னைவனம் போற்றிவரத் - துன்னுகுகன்
118. தொண்டு விரும்பியவன் றொண்டருக்கே தொண்டுசெய்யும்
மண்டலிக னாண்டான் வணங்கிவரத் - தொண்டுசெயும்
119. தானீக னாகித் தலத்தைப் பிரபலஞ்செய்
மானபரன் முத்தையன் வாழ்த்திவரத் - தீனமில்லாத்
120. தானத்தார் நல்ல தவத்தார்க டானத்தார்
ஆன புவியோ ரனைவோரும்- வானில்வரும்
121. இந்துவைச்சூழ் தாரகைபோ லெண்புவியு மோர்காலம்
அந்த முறுங்கடல்க ளார்த்தென்ன - முந்தி
122. இரைப்பப் புரந்தரனா ரேந்திழையா ளாறு

தரத்தின் முகவழகைத் தான்கண் - டுரைப்பதற்கும்
123. எட்டாத வின்பவெள்ள மேன்றமட்டும் வாரியுண்டு
மட்டாருங் கொங்கை மலைவளரக் - கட்டார்கொள்
124. மான்மகளார் முன்செய்த வன்கண்மைக் குள்ளுருகி
மீன்விழியா லானந்த மெய்யொழுக்கத் - தேன்மொழியாள்
125. ஆன திலோத்தமையு மாடரம்பை மேனகையும்
மானி னுருப்பசியு மற்றோரும் - பானல்சேர்

வாத்தியங்கள்

126. கண்ணி னிருவரையுங் கைகூப்பிச் சூழ்ந்துவரப்
பண்ணின் முறையே பதலைதுடி - தண்ணுமை
127. ஓர்காளம் பம்பை யொருகட் பறைதவில்
சீர்முழவம் பேரி திடிமமொலி - ஆர்தக்கை
128. கல்லவடந் தேர்கரடி கைபடக மொண்டிமிலை
சல்லரிநன் மாமுருடு தாமுழங்க நல்லசந்துத்

திருச்சின்னம்

129. தூகந்த மாதனத்தோர் தோகை யிருவர்புணர்
தூகந்த மாதனத் தோன்வந்தான் - பாகமதிற்
130. பானலைவாய்ப் பைங்குயிலார் பாவை யிருவர்விருப்
பானலைவாய்ச் சூரன் பகைவந்தான் - தானம்வளர்
131. வேள்விமலை யான்மகளை வேட்டோன் குறத்தியணை
வேள்விமலை யான்வித் தகன்வந்தான் - தாழ்வில்
132. அளகைவள்ளி யூருடையா னைமுகத்தோன் மைந்தன்
அளகைவள்ளி யூருடையான் வந்தான் - வளகுபெறு
133. பண்பைத் திருமலையும் பஞ்சா யுதன்மருகன்
பண்பைத் திருமலையப் பன்வந்தான் - நண்பாம்
134. பழநி மலைப்பாலன் பால்வந்தான் சீராம்
பழனி மலைப்பாலன் வந்தான் - சளமாம்
135. கதிர்காமத் தோனாங் கடுஞ்சூரை வென்ற
கதிர்காமத் தோன்காளை வந்தான் - பதமாம்
136. திருவே ரகத்தினட்டான் சீரடியார்க் கென்றும்

திருவே ரகத்தினட்டான் வந்தான் - உரியார்
137. திருப்பரங் குன்றத் திருந்தான் விருப்பாய்த்
திருப்பரங்குன் றத்திருந்தான் வந்தான் - தரிப்பாய்வாழ்
138. சீதத் திருவிலஞ்சிச் சேவகன்வந் தானெனவே
ஓதுதிருச் சின்ன மொலியெழுப்ப – பூதலத்திற்

குழாங்கள்

139. பேதை பெதும்பையுடன் பேசுமங்கை சீர்மடந்தை
காத லரிவை கமழ்தெரிவை - வாதைதவிர்
140. பேரிளம்பெண் ணாரும் பிலத்திலுள்ள கன்னியரும்
சீரிளம்பெண் ணாயத் திரளுடனே - நேரில்
141. அரமகளிர் கூட்டமுமே யாகி நிரையாய்த்
திரமுடைய மாடஞ்செய் குன்றும் - தரமுடைய
142. மாளிகையுங் கோபுரமு மண்டபமுந் தெற்றியுடன்
சூளிகையும் மேடைகளுஞ் சூழ்மறுகும் - ஆளிபோல்
143. அம்பொன் மடப்பிடிபோ லஞ்சொற் கிளிமயில்போற்
செம்பொனின் மான்போற் றிகழனம்போற் - கொம்பிலுறை
144. கோகிலம்போற் பூவைபோற் கோவைபோல் வாய்திகழ
வாகிலஞ்சி வீதியெலாம் வந்தீண்டி - வேகமுடன்
145. தேருடனே தேருடையார் சேர்ந்து பொருவதற்கு
நேருடைய வேளை நிகழுமட்டும் - சேரலர்கள்
146. ஈடுபெறத் தேரொளித்த தென்னவல்குற் பொற்றேர்கள்
ஓடிக் கலிங்க மொளித்திருப்ப - நாடியே
147. ஆறிரண்டு தோளு மழகுமுக மோராறும்
ஏறுங் கருணைவிழி யீராறும் - கூறுதிருக்
148. கையிலொரு வேலுங் கதிர்த்தபுரி முந்நூலும்
சைய நிகருந் தடமார்பும் - துய்யதிருக்
149. கந்தரமுங் காதுங் கனகமணிக் குண்டலமும்
அந்த முறுங்கருணை யார்மொழியும் - சிந்துரஞ்சேர்
150. நெற்றியுஞ் சேவ னெடுங்கொடியு நல்லடியார்
பற்றியிடு பாதப் பரிபுரமும் – உற்றுவளர்
151. தேவனைச் செந்தூர்வாழ் தேசிகனைச் சோலைமலைக்

காவனை வேள்விமலைக் காங்கெயனைப் - பாவனைத்தும்

152. வாசிதீர் காசுபெற மண்டலத்திற் சொன்னவனை
வீசுதிரு வேரகத்தின் மெய்ப்பொருளை - ஆசிலாப்

153. பாவி லருணகிரி பைந்தமிழின் மாரிபெய்ய
நாவிற் றிருப்பெயரை நட்டோனைக் - காவிலொரு

154. வள்ளிக் கொடிக்கு மரமாத் தவமிருந்து
கள்ள மணத்தாற் களித்தோனைத் - தெள்ளுதமிழ்த்

155. தென்னிலஞ்சி யானைச் சிவபிரான் றேசிகனை
உன்னி வணங்கி யுவந்தேத்திக் - கன்மிதப்பில்

156. அன்றுவந்த நாவுக் கரசன் றிருவுளம்போல்
ஒன்றிவந்து மாத ரெழிலுற்றுத் – துன்றவே

குழாங்களின் கூற்று

157. வெண்கடம்பு சூடும் விளக்கொளிசென் றேறிவரும்
திண்கடம்பு சூடுதிருத் தேர்பாரீர் - விண்புகழும்

158. பொன்னிலஞ்சி பாரீர் புகழிலஞ்சிச் சீர்பாரீர்
தென்னிலஞ்சி பாரீர் திருப்பாரீர் - மின்னனையீர்

159. தேன்வழியும் வீதிவரு தேரழகோ வவ்வீதி
தானழகோ வீதுணர்ந்து சாற்றுமென்பார் - வானிரவி

160. தேசெல்லாங் கூடித் திரண்டதுவோ நம்முடைய
ஆசையெல்லா மோருருவ மானதோ - தேசிகனை

161. எம்மை யணையவொட்டா தீர்புறமுஞ் சேர்ந்திருக்கும்
உம்முடையார் யாவ ருரையுமென்பார் - செம்மைபெறு

162. தெய்வக் கொடியுஞ் சிலைக்குறவர் மின்கொடியும்
பையப் படருமொரு பண்மலையே - உய்யும்வகை

163. எத்தித் திருக்கறுத்தே யேழை யடியரையாள்
சத்தித் திருக்கரத்துச் சண்முகா - நித்தமுமே

164. நித்திரையு நீங்காம னெஞ்சி னினைப்பவர்க்கு
முத்தித் திருவா முருகோனே - சத்துருவின்

165. வெற்புக் கயிற்றெட்டாய் வீதிவரு மெங்கண்முலை
வெற்புக் கயிற்றொட வேண்டாவோ - அற்புறுநக்

166. கீரன் புகண்மாலை யேந்தினீர் கேளுமெங்கட்
கீரன் புகண்மாலை யீந்திலீர் - வாரமுடன்

167. பெண்ணைப்பெண் னாக்கிவிடப் பேதலித்த தாகாமற்
பெண்ணைப்பெண் னாக்கிவிட்டாற் பேதமோ - மண்ணுக்குள்
168. வேலைக் கடம்பா விரும்புமெளி யேங்களுக்கோர்
வேலைக் கடம்பகர வேண்டாவோ - கோலுசமண்
169. ஆற்றை யொழியவைத்தா யல்லையோ வெங்கள்கண்ணீர்
ஆற்றை யொழியவைத்தா லாகாதோ - போற்றினர்க்குத்
170. தொங்க லணிந்தாய் சுவாமியுனைப் போற்றெமக்குத்
தொங்கலணிந் தாலதற்குத் தோடமுண்டோ - துங்கமுற
171. ஆலிங் கனம்வயிறே யாகுமென் றீர்கூடி
ஆலிங் கனஞ்செய் தணைகிலீர் - மேலுமென்றே
172. சென்றீர்ப்பத் தென்னிலஞ்சிச் செட்டிப் பெருமான்றேர்
நன்றுதிரு வீதி நடாவினான் – அன்றுதான்

பேதை

173. மேவுமொழி பேதைமொழி விள்ளு மொழிப்பேதை
கூவ வறியாக் குயிற்குழவி - தாவுவிழி
174. மான்போலு மென்னினந்த மான்போற் றெழிலறியா
மீன்போற் பிறழா விழியினாள் - யான்போற்றும்
175. ஆறுமுகத் தாறெழுத்தா னாரிலஞ்சிப் பூங்கொம்பில்
ஏறிவிளை யாடா விளந்தோகை - தேறியே
176. ஈன்றாளைக் காணா திருக்கவறி யாளழகார்
மூன்றாம் பிறைபோலு முண்டத்தாள் - ஆன்றுமே
177. வீடாதி வேண்டி விளங்குந் திருவிலஞ்சி
கூடார்போற் கூடாக் குழலினாள் - நாடாரும்
178. பன்னி யுரைக்கும் பதினெட்டுப் பாஷையன்றி
இன்னமொரு பாஷை யெனுமொழியாள் - தென்மதுரைப்
179. பொய்ச்சமணுக் குள்ளாகிப் போனசைவந் தான்முளைக்க
மெய்ச்சம்பந் தர்பார்த்த வேளைபோற் - பச்சம்
180. தளைக்குமுடற் குள்ளிருந்து தப்பா தெழும்பி
முளைக்கநாட் பார்க்கு முலையாள் - பிழைக்க
181. மறந்து மிலஞ்சி வணங்காரைப் போல
இறந்து பிறக்கு மெயிற்றாள் - சிறந்ததொரு
182. வைக்கோற் பழுதையைப்போல் வாழுகின்ற பாம்பையொரு

கைக்கே பிடிக்குங் கருத்தினாள் - மிக்கமலைக்

183. குஞ்சரத்தை யிந்தக் குடத்தடைத்துத் தாருமென்றே
பஞ்சரிக்கு மந்தப் பருவத்தாள் - மிஞ்சனையைப்

184. பேச்சுமரப் பாவை பிதற்றுதற்கு மென்னைப்போல்
ஏச்சுப் பயிற்றுவிப்பா யின்றென்பாள் - வாச்சவில்லின்

185. முன்றிலிடைச் சிற்றிலின்வாய் மொய்மணற்சோ றாக்கியதைத்
தின்றிடுமி னென்றென்று செப்புவாள் - அன்றயிலாப்

186. பண்பதனைப் பார்த்துப் பயந்தாண்முன் கூட்டமிடக்
கண்பிசைந்து நின்று கதறுவாள் - பெண்பிள்ளாய்

187. மங்கைப் பருவம் வருங்கா லயில்வரென்று
நங்கைமார் கூட்டி நடந்துசெல்லச் - சங்கையிலாத்

188. தென்னிலஞ்சி தன்னிற் றிருவீதி யோர்மருங்கிற்
தன்னிகரில் பொய்கைச் சரவணமும் - மின்னிகராம்

189. வள்ளியம்மை தெய்வானை வாய்த்த நடுவதனில்
வெள்ளிமயில் வாகனனை மேலமைத்தே - ஒள்ளிழையீர்

190. சேவியுமின் சேவியுமி னென்றென்று செப்பியே
பாவையுந்தா னின்று பகருங்கால் - ஆவிநிகர்

191. பாத சரமும் பரிபுரமுங் கிண்கிணியும்
சீதப் புரிநூற் றிருமார்பும் - ஆதவர்கள்

192. எல்லா முதித்ததென்ன வீராறு குண்டலமும்
சொல்லா லடங்காச் சுடர்முடியும் - சல்லாபம்

193. சேரு மழகுஞ் சிறப்பு மதற்கிசைந்த
சீரு முடைய திருவுடையான் - கூருடைய

194. வேலுடையான் றோகை விடையுடையான் வீரகண்டைக்
காலுடையா னாறிரண்டு கண்ணுடையான் - மேலும்வளர்

195. செந்தூ ருடையான் றிருப்பரங் குன்றுடையான்
நந்தூர் திருவாவி னன்குடியான் - சந்தூரும்

196. ஏரகத்தான் சோலைமலை யென்றும் விருப்புடையார்
சீரகத்தான் காவித் திருமலையான் - பாரகத்தில்

197. குன்றுதொறு மாடல்புரி கோமா னடியர்மனம்
குன்றுதொறு மாடல் புரிகோமான் - மன்றுகளில்

198. சித்திரமா மன்றத் திருநடனத் தானருள்வி
சித்திரமா மன்றப்பாத் தேசுடையான் - நத்தரியை

199. அம்மா னெனவுரைப்போ னம்மான் மருகனெனும்

பெம்மா னிலஞ்சிப் பெருமையான் – எம்மான்

200. திருவருள்போ லெத்திசையுந் தெய்வமுர சார்ப்ப
அருமைத்தே ரேறி யணையத் – தெரிவையர்கள்

201.ஓரானந் தக்கடலி லோயாமன் மூழ்கியந்தச்
சீரானந் தக்கடலைச் சேவிப்பக் - காராரும்

202. கோதையரு மன்னையருங் கூறுமுயிர்த் தோழியரும்
பேதையரும் போற்றுதல்போற் பின்போற்றித் - தாதிய

203. சென்னி வணங்கித் திருக்குமரன் கைப்பிடித்த
வன்னி தனைப்பிடித்து வாருமென்றாள் - கன்னிக்

204. குயிலே மடக்கொடியே கோடரத்தி லாடும்
மயிலே பிடியே வளர்மானே - கையிலே

205. யார்பிடிப்பார் கந்த ரனுபூதி சொன்னகிளி
ஏர்பிடிக்கு நீபிடிக்க வெய்துமோ - பார்பிடிக்க

206. என்றுகனி வாய்ச்சியர்க ளெல்லோருந் தான்கூற
நின்று நிலஞ்சுரண்டி நிற்பவே - வென்றிவடி

207. வேல னுலாவி விளையாடி மேற்சென்றான்
சேலனுமங் கோடியே செல்கின்றான் – சாலப்

பெதும்பை

208. பெதும்பை யவளொருத்தி பேதைமைகள் சற்றே
பதுங்கி யொதுங்கும் படியாள் - ததும்புகொங்கை

209. ஏரார் திலோத்தமைக்கோ விந்திரைக்கோ மேனகைக்கோ
தாரா ருருப்பசிக்கோ தங்கையாள் - பாராரும்

210. வெய்ய கதிர்க்கு வெளிவரா துண்ணெகிழும்
துய்ய கமலமுகைச் சொர்க்கத்தாள் - பையவே

211. மிக்க குழைநெகிழ மேன்மேலு மூப்பியர்கைத்
தக்கை தவிர்ந்த தனிக்குழையாள் - புக்கவொரு

212. பம்பரத்தி னன்முளைபோற் பற்றிக் கடைந்தறுத்த
அம்பரத்தி னன்முளைபோ லாமுலையாள் - நம்பும்

213. அருட்பார்வை யல்லாம லாடவரை வாட்டும்
மருட்பார்வை யான வலையும் - தரிப்பாக

214. மூலந்தான் பார்த்து முதன்மைபெறக் கற்பதற்குக்
காலந்தான் பார்க்குமிரு கண்ணினாள் - மேலுந்தான்

215. தென்னிலஞ்சி யெங்கோன் றிருத்தொண்ட ரானவர்கள்
தந்நிலைமைத் தொண்டு தலைக்கொண்டே - உன்னும்
216. அடிமையாற் செய்கரும மல்லலின்றாம் போல
நெடிமையாய்க் கூடுகுழ லாணோர் - துடியிடையிற்
217. பட்டாடை சுற்றப் பணிபூண வாசையல்லால்
கட்டாக வேறோர் கருத்தில்லாள் - தட்டாமல்
218. இல்லத் திருந்துமன்ற லென்றவிளை யாட்டயர்ந்து
மெல்லத் திருந்தும் விருப்பினாள் - நல்ல
219. மகிழம்பூஞ் சோலைநிழல் மௌவல்படர் பந்தல்
மகிழுங் கனகமலர் முன்றில் - மகிழும்
220. குயில்பேடை செம்போத்துக் கோழி புறவம்
மயில்பூவை பின்னே வரவே - ஒயிலாக
221. வல்லியருங் கிள்ளைகளு மான்களுமே முன்செல்ல
மெல்லியர்கள் மெல்லென்ன மெல்லென்ன - நல்லசங்கை
222. சங்கினமுந் தண்மதியைத் தாரகையுஞ் சூழ்வதென்ன
மங்கைமார் சூழ்ந்துவர வந்திருந்து - கங்கைமுதற்
223. சத்தநதி முத்தோ தடங்கடலேழ் முத்தமோ
சித்ரநதி முத்தோ தெரிந்தெடுத்துப் - பத்தியாய்க்
224. கொங்கைக் குவட்டிற் குலவுமுத்த மாவமெனச்
செங்கைமேற் கூத்தாடுஞ் சீர்காட்ட - அங்கியிலே
225. வந்த தகர்க்கு மருண்டமர ரோடியநாட்
சிந்தையுடன் காத்த செயலொன்றும் - முந்துசூர்
226. கூறிரண்டே யாக்கிக் கொடிமயில் வாகனமா
ஏறிப் பிடித்த வெழிலிரண்டும் - தேறியசீர்ப்
227 பொய்யா மொழிகீரன் போத வருணகிரி
மெய்யா மொழிகள் விதமூன்றும் – நையாத
228 கும்பன் முசுகுந்தன் கோவீர வாகுவுக்கும்
உம்பருக்குஞ் சொன்ன உரைநான்கும் - அம்பதுமம்
229 துன்றயனார் வேடருடன் சூரரொரு மூவரையும்
அன்றுபங்கஞ் செய்த வவையைந்தும் – வென்றிசேர்
230 கின்றபரங் குன்றுங் கிளர்செந்தூ ரேரகமும்
குன்றுதொ றாடல்குளிர் சோலைமலை – என்றுமே
231 காந்த மணியிற் கதிருரிமை தானிருந்தும்

வேய்ந்தவொளி யெங்கும் விளங்குதல்போல் – வாய்ந்த்திருத்
232 தென்னிலஞ்சி தன்னிற் றிருவருணீங் காதிருந்தும்
தன்னிலைமை யான தலமாறும் –பன்னியே
233 விண்ணமுத முண்டுவந்தோர் மீறிவள ரேழிசையின்
பண்ணமுத முண்டுவப்பப் பாடியே- நண்ணுகழங்
234 கன்றெடுத்துக் கொண்டுவிளை யாடும் பொழுதெளியோர்
மன்றுணையாய் மேவி வளர்குமரன் –குன்றுதனைத்
235 தூளாக்கு மெம்பெருமான் றொண்டருட னென்னையுமோர்
ஆளாக்கு மெம்பெருமா னென்னையன் – தாளாரும்
236 மூவருக்கு மேலா முதற்பொருளா யோங்குகுகன்
தேவருக்குச் சேனா பதித்தலைவன் – யாவருக்கும்
237 தேசிகன்வே தாந்தன் றிறற்கடம்ப னற்புலவோன்
வாசிபெறக் காசுமுன்னாள் வாங்கினோன் – வீசுபுகழ்
238 ஆறுமுக னைந்துமுகத் தான்மைந்தன் வள்ளியூர்
ஏறி மலைகுடைந்த வெந்தையான் – வீறுமயில்
239 வாகனத்தன் வாகனத்தன் வன்சிரத்தி லேபுடைத்த
வாகனத்தன் மாகனத்தன் வள்ளியோன் –கூறுதிரு
240 மான்மருகன் மான்மருகன் மான்மருகன் வேன்முருகன்
மான்மருகன் மாதுமையாண் மாமதலை – ஞாலமெல்லாம்
241 வந்து முழவொலிக்க வாழ்கோடி சூரியர்கள்
சுந்தரமு மோருருவாய்த் தோன்றியசேய் – முந்து
242 புறக்கடலின் றேயெழுந்து போந்ததென்னுஞ் சேனை
திறற்கடம்பன் றேர்மீதிற் செல்ல – உறக்கழங்கு
243 பாதியிலே யாடல் பல மறந்து விட்டகன்றாள்
வீதியிலே பாவையைப்போன் மேவினாள் - நீதிபெறு
244 திங்களைநேர் கண்ட திருமால்சீர்க் கொப்பூழ்போல்
அங்கை குவித்தே யடிபணிந்தாள் – மங்கலநாண்
245 பூண்டிருவர் வாழும் புதுமைகண்டாள் கண்டவுடன்
வேண்டியவ ரோடிருக்க விண்டிசைத்தாள் - பாண்டதும்பு
246 காவிடத்துக் கோகிலமே கண்மணியே யுன்றனக்கென்
கோவிடத்திற் போயிருக்கக் கூடுமோ – தேவமயில்

247 வள்ளி மயிலின் மலரடியைப் பூண்டாலும்
ஒள்ளிழையா யுன்றனக்கு மொண்ணுமோ – தெள்ளமுதே
248 பொன்னேவா வென்றாயும் போந்தழைக்கச் சேவகன்பால்
தன்னேச மும்பொறியுஞ் சார்த்தியே – மின்னாவாள்
249 கூடத் தொடர்ந்தேகிக் கோமான்றே ரெங்கென்று
தேடத் திருத்தேர் செலவிட்டான் – வேடன்
250 தனுப்பார்த்து நாண்பார்த்துச் சத்தியுடன் மங்கை
தனுப்பார்த்துத் தானு நடந்தான் - இனிப்பான
251 மங்கைப் பருவ வரிக்குயில்மிக் காய்வளர்க்கும்
செங்கைக் கிளிபதுமஞ் சேரன்னம் – சங்கையின்றி
252 அண்டரையும் வெல்லு மனங்கனுடன் வாதாடும்
கெண்டையையும் வெல்லுங் கிளர்கண்ணாள் – கண்டுமொழிக்
253 காரிகைமார் யார்யார்க்குங் காம னிரதிக்கும்
வேரிதா னூற விரும்பிதழாள் – வாரிவிளை
254 முத்தமோ வன்றியிள முல்லையோ நேரென்னச்
சித்த நிலைப்பரிய சீரெயிற்றாள் – நித்தமுமே
255 தென்னிலஞ்சி யேத்தாருந் தென்னிலஞ்சி யேத்தினரும்
என்ன விளம்பு மிடைமுகத்தாள் – சொன்னமலை
256 இங்கிரண்டு தானுண்டே லீடுசொல்லக் கூடுமென்னப்
பொங்கிரண்டு மேருப் புணர்முலையாள் சங்கையின்றி
257 சானுக்கு ஞெண்டு தனுவினுக்கு நற்புருவம்
தனுக்கு நேராந் தெரிமொழியாள் – வானுக்குள்
258 உம்ப ருவக்கு முவட்டாத தெள்ளமுதம்
செம்பதுமக் கோயிற் றிருவனையாள் – அம்பரத்தைத்
259 தொட்டுலவு மேடையையுந் தோகையர்க டங்களையும்
விட்டுத் தனியே வெளிவாராள் – உட்டினமாம்
260 வெப்பந் தவிர்த்திடவே வீசுதென்றன் மேடையின்மேல்
துப்பிதழி யார்சூழத் தோகைபோல் - செப்பமுடன்
261 கந்துகங்கொண் டாடுதொறுங் கானமயி லாடவங்கே
வந்தொளித்து நின்றே மதனாடச் – சந்ததமும்
262 கண்ணும் பிறழக் கடைக்கண் சிவப்பேறப்

பண்ணுடனே செங்கனிவாய் பாட்டயர – நண்ணுமிரு

263 காதிற் குழையாடக் கண்ணின் மணியாடச்

சோதிக் கலன்கள் துவண்டாடச் – சூதில்

264 நயங்கண் மிகுந்து நலங்கள் சிறந்த

குயங்க ளிரண்டுங் குலுங்கத் – தியங்கி

265 நுசுப்பு மொசிந்து நுடங்கி மடங்கிப்

பிசிப்பின் வருந்திப் பெயர்ந்து – வசிப்பின்

266 நிமிர்ந்து குனிந்து நெருங்கி விரைந்து

குமிர்ந்து மயர்ந்து குலைந்தே – அமிழ்ந்தே

267 எழுந்து மிருந்து மிடங்கை பரிந்து

செழுங்கை வலங்கை திரிந்து – விழுந்தும்

268 உரத்தின் மிகுத்த வொளித்திரண் மொய்த்த

சரப்பளி பொற்பணி தத்த – நிரப்பிய

269 கந்த சுகந்த கதம்பொடு குங்கும

சந்தன முங்கு தனங்களில் - வந்திடு

270 கட்டு ரவிக்கை கதித்திட மெய்க்கலை

மட்டறு செக்கணி வைத்திட – இட்டமாய்

271 பாதச் சிலம்பு பயப்பயவென் றோலமிடச்

சீதக் கரவளைகள் சேர்ந்தொலிப்ப – நீதியாய்க்

272 கந்தருவ தேசத்துக் கன்னியருங் கைவிதிர்ப்ப

சுந்தரியு மேனகையுந் தோளசைப்பப் – பந்துபிடித்

273 தாடினா ளாடுதொறு மாறுமுகத் தான்புகழே

பாடினாள் பூவாளி பாக்கியமே – தேடியே

274 ஓடி யரனா ருருவுவக்கு மோகினியே

ஆடிநிகர் கன்னத் தருங்கிளியே – ஓடைவளர்

275 அஞ்சமே கஞ்சமே அம்பொன் மடப்பிடியே

மஞ்சமேய் மாதங்க மாமயிலே - தஞ்சமே

276 எங்கள் குயிலே யெனமடவார் போற்றிசைப்பப்

பங்கயமான் பந்து பயிறல்விட்டு – மங்கையுமே

277 தென்னிலஞ்சி வாழ்கருணைச் செவ்வேளைத் தேடுதலு

மன்னு புதையல் வறிஞனுக்குத் - தன்னிலே

278 வந்ததுவே போல வதனமதி யோராறும்
கந்தரமு முந்நூலுங் கட்கடம்பும் – எந்தமையாள்
279 வேலு மயிலும் விளங்குந் திருமுடியும்
காலுந் திருச்சிலம்புங் கண்டுதான் – சீலமுறும்
280 அன்பர்களுக் கன்பானை யன்பகத்தி லில்லாத
வன்பருக்கு வன்புடைய வானவனை – இன்பமாய்
281 ஏரகத்தில் வாழு மெளியேங்கட் காரமுதைச்
சூரகத்தைக் கீறுஞ் சுடர்க்கொழுந்தைப் – பாரகத்தில்
282 வெண்ணெயுண்ட வாயாலே மேதினியெல்லாமுண்ட
கண்ணனுக்கு நன்மருக்க் காங்கெயனை – விண்ணினுக்கு
283 மெய்ப்பா மொருமணியை வேத விழுப்பொருளைத்
துய்ப்பார்க்கு நல்குஞ் சுடர்க்கொழுந்தைப் - பைப்பாந்தள்
284 சூடுந் திரிகூடத் தோன்ற லொருமகனை
நாடுந் திருவிலஞ்சி நாயகனைத் – தேடியே
285 உள்ளங் களிப்ப வுரோமமெலாந் தான்சிலிர்ப்ப
வள்ளற் குருபரனை வந்தித்தாள் – தெள்ளுதமிழ்ச்
286 சீரானந் தக்கடலைச் சேரவெதிர் நோக்கினாள்
பேரானந் தத்தின் பெருங்கரையை - ஆராய்ந்தும்
287 காணாள் புனக்குறத்தி காதலனா னீரவளும்
காணாதென் காதலனாக் கைகலவீர் – நாணாளும்
288 பக்கத் திருந்து பணிவிடைசெய் யும்மவர்க்குப்
பக்கப் பணியேனும் பாலிப்பீர் – செக்கர்நிறத்
289 தேவரீ ரென்றுரைப்பச் சேயிழையைப் பாரான்போல்
தேவனுந்தான் வேறோர் தெருவணைந்தான் - பாவைக்குச்
290 செவ்வேள் வடிவமெலாஞ் சிந்தையுணீங் காதிருக்கும்
அவ்வேளை யெய்வதுவு மல்லலென்று – மெய்வெளும்
291 மைத்துனனே யாகையான் மாதவளுந் தங்கையென்று
சித்தசனுந் தேரைச் செலவிட்டான் – நித்தமுமே
292 வேண்முரசும் வேளிருதும் வேளுடைய சின்னமுடன்
வேளுடைய தேரும் விகாதமென்றும் – வேல்குடையாம்
293 இந்துவும்வெப் பன்றிமுத்து மீரப் புழுகுடனே

சந்தனம்வெப் பென்றுமன்று தானறிந்தாள் – விந்தைபெறு

மடந்தை

294 சீரார் மடந்தை தெரிவையர்க்கெல் லாமரசி
பேரா ரநங்கன் பெருங்குருவே – நீரார்
295 குமிழிக் குழுவைக் குலவுங் கனகச்
சிமிழைத் தெருவிற் சிதறி – அமிழ்திற்
296 பழகிப் பழகித் தடித்துப் பணைத்தே
அழகைப் பிடித்தங் கடைத்து – விழையக்
297 குடத்திற் பருத்துக் குதித்துக் குதித்துத்
திடத்தைக் கனத்தைச் செலுத்தி – அடர்த்துத்
298 தவத்தவர் மனத்தைத் தவிக்க வடித்துச்
சிவத்தைத் தரிப்பர் திறத்தைக் – கவர்த்துமேற்
299 கோரித்துப் பூரித்துக் கோடொத்துப் பூணிட்டு
வீரத்திண் சீரொத்து வீரத்துப் – போரிட்ட
300 வாரற்று மீறிட்டு வாகொத்து மோகத்துத்
தார்சுற்று போகத் தடமுலையாள் – கார்சுற்றும்
301. தண்டலையிற் சென்றிலஞ்சித் தாமரைவா ழன்னமென
மண்டபத்தி லாசனமேல் வந்திருந்தே - ஒண்டொடிமார்
302. சூழு முடுப்போலத் தோகையொரு சந்திரன்போல்
வீழி யிதழ்மடந்தை வீற்றிருந்தே - ஏழிசைக்
303. கின்னரிகள் மீட்டிக் கிளர்யாழுங் கைப்பிடித்து
மன்னுசுர மண்டலமும் வாழ்த்தெடுத்துப் - பன்னி
304. மகரயாழ் வீங்கியதின் மாடகமே றிட்டுச்
சகரமுத லேழெழுத்துந் தாக்கி - அகரத்தின்
305. சாரி யெழுப்பியே சத்தசுர மாக்கியே
ஆருமோ ரேழிசையு மன்றிசைத்துச் - சேரவே
306. வாழோசை ரண்டுடனே மந்தரந் யந்தாரம்
ஏழோசை யுந்திவவி லேற்றிய - நாளுமே
307. வாயு மிடறும் வழங்கு மிடமுமலால்
ஆயவுறுப் பெல்லா மசையாமல் - மேயதிறற்

308. காந்தாரி காம்போதி கல்யாணி யுந்தேவ
காந்தாரி மாளவியுங் காவடி - சேர்ந்தாடும்
309. தோடி வராளி துலங்கு மலகரியும்
நேடி வராடி நிசநாட்டை - நாடும்
310. வயிரவி பூபாள மாமோ கனமும்
செயிரறுமு காரியுடன் சேர்ந்தே - உயிரான
311. வல்ல செயசாட்சி மற்றுமுள்ள ராகமெல்லாம்
சொல்லரிய தாளங்கள் சோர்வின்றி - அல்லற்
312. கருப்பையுடன் பூஜையுந்தங் காதுவந்து கேட்பப்
பருத்த கருடனுடன் பாந்தள் - விருப்பமாய்
313. ஓவியமுத் தாவரமு மொக்கவே நின்றுருக
ஆவலுட னும்ப ரமுதென்னச் - சீவனுண்டாய்ப்
314. பட்டமர முந்தளிர்க்கப் பண்டிருவர் கொண்டாட
இட்டமுடன் பாடி யியற்றினாள் - மட்டவிழும்
315. தாமரைக் குழலமைத்த சஞ்சீவி யாரமுது
காரைக் குழலமைத்த கற்கண்டு - சீர்மிகுத்த
316. எங்கள் குடித்தனக்கு மிவ்வூர்க்குநாயகமென்
றங்கை வளையா ரதிசயிப்ப - மங்கலவாழ்த்
317. துய்யானம் பாடி யுயரிலஞ்சி யூர்பாடி
வையார் வடிவேல் வளம்பாடிப் - பொய்யாத
318. வாக்கு மனமு மலர்பதத்தி லேயிருந்தித்
தேக்குந் திருவழகின் சீர்பாடி - ஆக்கமாம்
319. கானக் குறத்தித் தன்மேற் காதலெலாம் பாடுங்கால்
தானை சரியவளை தான்சரிய - மானவேற்
320. கொற்றவனார் மீதே குலாவுமயல் கொண்டதால்
அற்றமாய் வீணை யயர்க்கின்றாள் – பொற்றொடிமார்
321. ஏதென் றெடுப்பளவி லீராறு செங்கைபெறு
நாத நறுமுகத்து நாதாந்தன் - வேதன்
322. சிரத்திற் புடைத்த திறற்செந்தி லாரும்
தரத்த னிலஞ்சித் தலத்தான் - திரத்துடனே
323. வந்தான்வந் தானெனவே மாதினுக்கு நற்செவியிற்
சிந்தாமற் சின்னஞ் சிறப்பிக்கச் - சந்தாப
324. மோகமய றீர்ந்தெழுந்து முத்தனையார் தற்சூழத்
தாகமுடனெழுந்து தானணுகி - நாகம்வரு

325. செம்மேகம் போன்று சிவந்த திருவடிவும்
அம்மேகம் போன்றிருண்ட வம்மயிலும் - எம்மேலும்
326. ஊன்று பதமு முபய பரிபுரமும்
தோன்றுமுடி யோராறுந் தோட்கடம்பும் - ஆன்றுதான்
327. மான்மகளார் கொங்கையுடன் வானரசி கொங்கையணி
நானம் வழிந்தொழுகு நன்மார்பும் - தேன்மொழியாள்
328. வெற்பரசி யான விமலைகுழல் வாய்மொழிமான்
அற்புடனே யீன்ற வறுமுகனைப் - பொற்புடைய
329. வேள்வி மலையானை வீர மயிலானைக்
காவி மலையானைக் காங்கெயனைத் - தாழ்வில்
330. திருவிலஞ்சி யானையெதிர் சேவித்தான் சேவித்
துருவிலஞ்சிப் பொன்னையுரம் பெற்றாள் - மருவியே
331. சேவித்த நற்பலன்கைச் சிக்கிற்றென் றேயவன்றேர்த்
தாவிநடந் தாள்சிறிது சாற்றுவாள் - கோவியப்
332. மேத முடையாய் வெட்டிவளர் கண்ணுடையாய்
மோச முடையாய் முகமுடையாய் - தாகமுடை
333. மாலை யுடையாய் வனையு மரையுடையாய்
சேலை யுடையாய் திருவுடையாய் - கோலமுடன்
334. தால மிகவுடையாய் சண்முகனை யுள்ளுடையாய்
வேலை யுடையாய் விருப்புடையாய் - நீலமுடன்
335. கோங்குடனே காந்தள் குமிழுடனே தாமரைப்பூத்
தாங்கி யெனைப் போலுமிந்தத் தன்மைபெற்றும் - ஓங்கும்
336. கடப்பனையென் கண்ணெதிரே காட்டாமல் வீதி
கடப்பதுவு நீதிசொல்காற் றேரே - கடப்பனையே
337. வைத்திருக்கு முன்போனான் வைத்திருக்க வேண்டுமென்பால்
உய்த்திருநீ யென்றுரைத்து மோடுமதை - மொய்த்து
338. மறிப்பவள்போற் செல்வாளை மாதரெல்லாங் கூடிக்
குறித்து வணங்கிக்கொண் டேகச் - சிறப்புநகை
339. மான்மருக னீந்தந்த மான்மகனோ டேயுலவி
மான்மருவும் வேறோர் மறுகணைந்தான் - மேன்மை

அரிவை

340. அரிவை யொருத்தி யரிவையர்க்கு மேலாம்

தெரிவைக்கு நேரிளைய செல்வி - வரியரவின்
341. பையோநற் றேர்த்தட்டோ பார மதனிருப்போ
சையோகஞ் செய்யுந் தடநிதம்பம் - மெய்யான
342. பைந்தமிழைக் கேட்டுப் பலனுதவார் பாக்கியம்போல்
நைந்த விடையுடைய நங்கையாள் - செந்தமிழின்
343. கல்வி மழைக்குக் கனக மழைபொழிவோர்
செல்வம்போல் வீறுந் திருமுலையாள் - நல்லதொரு
344. வித்துரும் மேடையின்மேன் மெல்லியலார் சூழ்ந்துநிற்பக்
கைந்துரும்பொன் றேந்தியெதிர் கந்தனார் - சிந்துவிளை
345. யாடினதெ லாம்முதியோ ராய்ந்தெடுத்துக் கூறவே
நாடி யவையெழுது நாளின்கண் - கூடியே
346. பாவைமா ரெல்லாம் படிப்படிநீ தானெழுதும்
தேவர்களை யொன்றொன்றாச் செப்புகெனப் - பூவையீர்
347. சூரனிடந் தூதுசென்று சொல்லித் திரும்பிவந்து
வீர னுரைக்கும் விதம்பாரீர் - சாரமாய்த்
348. தேவகுரு வந்துகுரு தேசிகர்க்குச் சொல்லுவார்
மூவர் பிறப்பை மொழிகுதலும் - ஆவலுடன்
349. வெள்ளியா லண்டமெல்லாம் வேண்டியது மற்றுமெலாம்
வள்ளற்பாற் கூறு வதும்பாரீர் - உள்ளமுடன்
350. சென்னி வணங்காத் திசைமுகனைக் காவல்வைத்து
மன்னி யிருந்த வகைபாரீர் - துன்னியே
351. இந்திரன்வந் தெய்தி யிடருரைப்பக் கேட்டுவந்து
சிந்தை மகிழ்ந்திருகுஞ் சீர்பாரீர் - அந்தமுனி
352. மீறு மகத்தில் வெகுண்டு வருந்தகரை
ஏறி நடத்து மெழில்பாரீர் - சீறியே
353. அண்டர் புரந்திருந்த வாண்மயிலை வாகனமாக்
கொண்டு நடத்துங் கொலுபாரீர் - தொண்டுபுரி
354. அண்டரெல்லாங் கூடி யடிவணங்கிப் போற்றிசெய்து
தெண்டனிட்டு நிற்குஞ் செயல்பாரீர் - கண்டமறு
355. உள்ளவன்றான் வேண்டியே யுண்மைப் பொருள்கேட்ப
விள்ளவவன் வீற்றிருக்கு மெய்பாரீர் - உள்ளும்
356. அகத்தியன்வாய் பொத்தி யடிபோற்ற வுண்மை
மகத்துவத்தைக் கூறுமறை பாரீர் - மிகக்குறத்தி
357. துன்றுதினை நற்றேனுஞ் சொற்றேனுங் கூட்டியே
தின்று ருசித்திருக்குஞ் சீர்பாரீர் - என்றுரைப்ப

358. முத்தர்களு பத்தர்களுமோன முனிவர்களும்
சித்தர்களு மாழிபோற் சேர்ந்தொலிப்ப - நித்திலத்தின்
359. தொங்கலார் தேர்மீதிற் சோலைமலை செந்தூரில்
தங்குந் திருவிலஞ்சிச் சண்முகனார் - புங்கமுடன்
360. இங்குவந்தா ரென்றியங்களீரொன் பதுமொலிப்ப
மங்கைமார் கூட மடமயில்போய் - அங்கைகுவித்
361.தாசைகொண்ட பித்தருட நாசித்தர் தஞ்செயலும்
பேசி நிவர்கடொழில் பேதமோ - பாசிழையாள்
362.அப்படியே மாலி லழுத்தினா ளேரகத்திற்
செப்பு திருமலைவாழ் செவ்வேளே - முப்புரிநூல்
363. வாணனே வள்ளியூர் வாணவனே பொற்பணியின்
பூணனே தென்னிலஞ்சிப் புண்ணியனே - நீணிலத்திற்
364. சேரத் திருவுளமோ சிந்தையில்லை யோவிந்த
வேரிக்குழ றாழு மெல்லியலை - ஆரமுடல்
365. காயுமோ வென்பளினிக் காதல் கொண்டு பெண்டுவைப்ப
தோயுமோ வெங்கள்குடிக் கொண்ணாதோ - நீயுந்தான்
366. சொந்தமுடன் பெண்டாயந்தோகைதனைக் கொள்ளாயேல்
இந்த வழக்குவிடோ மென்பார்முன் - சிந்தையுடன்
367. தம்மிடத்தி லன்புவைப்போர் தங்களுக்கு வேண்டுவன
செம்மைதருஞ் செவ்வேளுஞ் சேயிழைக்கு - வெம்மைவந்து
368. காயாமற் சற்றே கடைக்கட் கிருபை வைத்துச்
சேயோனும் வேறோர் தெருச்சென்றான் - காயில்
369. பெரிய தெரிவையிவள் பேரிளம்பெண் டங்கை
தெரிவையர்க்குள் ளேராச செல்வம் - பரிவினரன்
370. உண்ணஞ்ச மென்றே யுவமித்தோ மாயினிவள்
கண்ணஞ்சி னாரழைப்பார் காசினியில் - நண்ணுநுதி
371. அம்பு முறையி லடங்கி யொடுங்கிவிடும்
வெம்பும் விழிக்கணைக்கு வெள்கியே - சொம்புபெறும்
372. பாந்தத் தயலென்றும் பாரவவ்வில் ரண்டென்றும்
மாந்தர்களை யேவு மதர்விழியாள் - சாந்தணியும்
373. கொங்கைக் கிணையாக் குலாவவிள நீர்தாளில்
தொங்கித் தலைகீழாய்த் தூங்குமே - பொங்கிவளர்
374. விந்தம் புவியினுக்குள் மேருவரன் வில்லாகும்
எந்தமலை யிந்தமுலைக் கீடாகும் - சந்திரனேர்

375.வத்திரத்துக் கொப்பாக வாரிச நான்முகனை
நித்தியமுந் தாங்கிநிற்கு நீரினுக்குள் - ஒன்றின்

376.தொடையாம் பதினெட்டிற் சொன்னபதின் மூன்றே
இடையா யுடைய விடையாள் - இடைமேல்

377.வரைமேல் வரைகளின்மேல் வான்கமுகி னீலம்
நிரையாகப் பூத்தநெடுங் கொம்பு - விதியாரம்

378.மாதவரை முன்னான் மயக்கவந்த மாதரசி
மாதரைவிட் டேகாத மாணிக்கம் - மாதரெல்லாம்

379. சூழ்ந்து வணங்கித் தொழுதுநிற்ப வாசனமேல்
வாழ்ந்து கொலுவாய் மகிழ்ந்திருப்ப - வீழ்ந்து

380. சதங்கைதண்டை பாடகமுந் தாம்பாடப் பாடும்
மதங்கி யொருவணிதை வந்தாள் - இதம்பெறவே

381. மின்னேபொன் நாட்டரசு விட்டகன்று மண்ணுலகில்
அன்னேநீ வந்த தசிசயமே - துன்னுமுலை

382. விண்டுக் குடையினைபோல்வீண்குற்றங் கூந்தலுக்கு
வண்டுதான் செய்ததுண்டோ மாங்குயிலே - வண்டைக்

383. களங்கமறப் பாடிக் கருதிவெல்வ னென்றே
விளங்குமிசை பாடினியும் விள்ள - வளம்பெருகு

384. செந்தூர் திருமலையான் சீர்வேள்வி நன்மலையான்
நந்தூர் திருவாவி னன்குடியான் - சந்தூரும்

385. தென்னிலஞ்சி வீற்றிருக்குஞ் செவ்வேள் தசாங்கமெல்லாம்
உன்னி யுரையென் றுரைத்தலுமே - மன்னிவளர்

386. பாரார் பெருமை பகர்ந்த மாதனமாம்
சீரார் வரையின் செழுமைகளும் – பேரான

387. முன்னா ரியநாடு மோன முனிவர்புகழ்
தென்னா ரியநாட்டின் செல்வமும் – எந்நாளும்

388. பன்னிலஞ்சித் தாதியரும் பார்த்துமகிழ் வெய்துமிந்தத்
தென்னிலஞ்சித் தானச் சிறப்பும்-இந்நிலத்தில்

389 குத்திரம்வெண் குட்டமுடன் கோடி வினையறுக்கு
சித்திர மாநதியின் சித்திரமும் – நித்தியமும்

390 நாடிரண்டைஞ் ஞூறு நரவரியும் போயுலவும்
கோடிரண் டாயிரமார் குஞ்சரமும் - நாடியே

391. வேலா யுதம்படைத்த மீளித் திருக்கரமும்
காலா யுதம்படைத்த கைக்கொடியும்-மேலான

392. வெற்றியுடன் வீரம் விளங்குமன்ற லம்முரசே
உற்று முழங்கு முயர்முரசும்-பற்றித்
393. திடம்பளரும் போற்றத் திருமார்பிற் சூடும்
கடம்பலர்ப்பூங் கொத்துக் கணியும்-அடங்கிக்
394. குமரன் றுணையெனவே கோவுலகங் கூறி
அமருந் திருவாணை யன்பும்-குமரவேள்
395. வென்றித் தசாங்கத்தின் மெய்ம்மைபெரும் பாட்டமுதம்
ஒன்றிச் செவிவாயி னுட்புகுத-மன்றல்சேர்
396. கூந்தற் பிணையாசை கோடிகொண்டாள் காமவெள்ளம்
நீந்தப் புணைகாணாள் நின்றயர்ந்தாள்-சாந்தகுண
397. வல்லி விறலிதனை வாவென் றருகழைத்துச்
சொல்லியே காமத் துயர்செறித்தாள்-வல்லதெல்லாம்
398. பேசுவன பேசிப் பிதற்றுவன தான்பிதற்றி
ஆசையுடன் சேருமென்றே யன்றிசைப்ப-நேசமுடன்
399. சங்கந் திமிலை சமுத்திரம்போ லேமுழங்கப்
போங்கடியார் சீரோசை போந்திசைப்பத்-தங்கவே
400. செய்ய திருநாமஞ் சீரடியேற் கன்றளித்த
மெய்யன் றிருமலை மேல் வீற்றிருப்போன்-பையரவம்

பூண்டார் புகழ்பூண்டார் போற்று மடியவரை
ஆண்டார் திரிகூடத் தைம்முகனார் – வேண்டவரும்
ஆறு முகனிலஞ்சி யைய னெழுந்தருளி
ஏறிவரும் வைய மெதிர்தோன்றக் – கூறியதோர்
மூவர்க்கு ளேயொருவன் மொய்தமிழ்க்கு நீக்குளத்தில்
ஆவற் பொருள்கைக்கு ளானதுபோல் – தாவியே
இன்பவெள்ள மேற்கொண் டிருகைசிர மேற்கூப்பி
அன்பினுடன் பாதத்தி னம்புயமும் – துன்பமற
மார்பழகுந் தோளழகும் வத்திரத்தி னல்லழகும்
தேரழகுங் கணாடாள் திகைப்புற்றாள் – பேரழகின்
மன்மதனே யுன்றன் வளர்குடையு முன்றேரும்
என்மதியை யுண்டே யிடர்செயுமோ - நின்மதத்தாற்
சூர்மதத்தைச் செற்றோன் றொடர்பெனக்கு முண்டாகிற்
சீர்மதியுந் தென்றலுந்தாஞ் சீறுமோ – ஓரென்று
பன்னிப் பிதற்றுதலும் பன்னிரண்டு கையோனும்
சின்னக் குயிலோனுந் தேருமாய் – மன்னித்

திருமறுகிற் சென்றேகச் சேயிழைசெவ் வேளை
உருவெளியிற் கூடி யுகந்தாள் – பெருமைசேர் 410

பேரிளம்பெண்

பேரிளம் பெண்ணொருத்தி பேருலகங் கட்கெல்லாம்
சீரிளம்பெண் ணான திருவனாள் - பார்பிளந்து
பொன்னாட்டை யெல்லாம் பொருதுவென்று பொன்மலையை
இந்நாட்டை வெல்லு மிருதனத்தாள் - நன்னாட்டில்
வேளையம்புக் கம்பேவி மேலு மவனைவெல்ல
வாளும்புக் கேவு மதர்விழியாள் - நாளும்புக்
காலுக்கு நேருதர மம்மலைக்கு நேருமுலை
நூலுக்கு நேரான நுண்ணிடையாள் - பாலுக்கு
நேர்மொழியார் சூழ நெடுவேள் ரதிபணியத்
தாருலவு சிங்கா சனத்திருந்தே - ஏருலவு
பண்டுமின்று மென்றும் பகரிளையான் யாவனென்று
கண்டின்று சொல்லுமென்று கட்டுரைப்ப - மண்டலத்தில்
அன்ன நடையா ரவனி புரந்திருக்கும்
மன்னவரைச் சொல்ல மடமயிலும் - இன்னவரில்
மிக்கவர்கள் யாவரென்று வேதியரைத் தான்வினவத்
தக்கபதி நெண்கணமுஞ் சாற்றியே - திக்கரசர்
ஆதி முனிவருக்கு ளானமார்க் கண்டனுடன்
நீதிமக வானை நிகழ்த்தியே - போத
அயன்மாலைச் சொல்லி யவர்களுக்குண் மேலாம்
செயமாந் திரிகூடத் தேவன் - நயமாகத்
தந்தபிள்ளை யோரிருவர் தந்திமுகன் முன்னோனென்
றிந்தவகை யெல்லா மியம்பியே - கந்தனே [420]
என்று மிளையா னெவர்களுக்குந் தானிளையான்
துன்றிளையான் றென்னிலஞ்சிச் சோதியென்றார் - நன்றென்றே
சொன்னவர்கள் வாய்நிரம்பச் சொன்னஞ் சொரிவித்துப்
பொன்னரைநாண் சாலுவைகள் பொற்கடுக்கன் - மின்னுமொரு
கண்டசரங் கட்டுவர்க்கங் கற்கட்டு வட்டமனம்
கொண்டதுவாய் கொள்ளாமற் கூர்ந்தளித்துத் - தண்டலையில்
உய்யானஞ் சென்றே யொருகடப்பங் கன்றெடுத்துச்
செய்யோன்பே ரிட்டுநட்டுச் செப்பியே - மெய்யாகக்
கட்டினாள் போற்றுங் கடப்பமலர் பூத்தவுடன்
மட்டிலா நல்ல மகிழ்ச்சிபெற்றே - இட்டமுடன்
அங்கனையார் கூடி யழகு குரவையிட்டுப்
பொங்கு பதலைபம்பை புக்கியம்ப - இங்கெவரும்

காண்டிரெனத் திங்கடொறுங் கார்மயிலின் மேற்பவனி
வேண்டியே யாரல் விழாவெடுத்தே - ஈண்டுபொன்னும்
ஓதனமு நல்கி யுயரடியார் தங்களுக்குச்
சாதனமா முத்திநிலை சாற்றியே - போதக்
கடப்ப மலரெடுத்துக் கண்ணிகட்டிச் செவ்வேள்
தடப்புயத்திற் சாத்துவமோ வென்னத் - திடப்படவே
பெண்ணா ரமுதம் பிரியமு னேயுரைப்பத்
தண்ணா ரமுதே தனிமயிலே - கண்ணேகேள் [430]
இந்திரனார் பத்தர்மல ரேழை யடியர்மலர்
சந்தவரைக் கும்பன் றனிமலர்கள் - அந்தமுற
முந்நூன் மணிமார்பர் முப்போதுஞ் சாத்துமலர்
எந்நேரஞ் சூடு மிணையடிக்குப் - பொன்னேநீ
யேயெடுத்துச் சாத்துமல ரேறா தெனமறுப்பப்
போயெடுத்து வல்லி புலம்புதலும் - வாயெடுத்துப்
பாடு மடியார் பகர்ந்த படிதிருக்கூத்
தாடும் பெருமா னறுமுகவன் - நீடும்
கொடியார் தமைச்சாடுங் கொற்றவைக்கு மைந்தன்
அடியார்க் கெளியனலை வாயான் - பொடியாரும்
குற்றாலத் தண்ணல் குழல்வாய் மொழியுமைசேர்
வற்றா வடவருவி யான்மைந்தன் - கற்றாய்ந்து
சட்டி விரதஞ் சகத்திருந்த பேர்க்குமன
திட்ட வபீட்டமெல்லா மீந்திடுவோன் - கெட்டியாய்த்
தென்னிலஞ்சி வீற்றிருப்போன் செண்பகவி நாயகர்க்குத்
தன்னிகரில் லாததுணைச் சண்முகத்தோன் - முன்னரெல்லாம்
பூத கணநடப்பப் பொய்ம்மையில்லா மெய்யடியார்
ஏதமறப் பின்னே யிசைந்துவரப் - போதமுறும்
கும்பன் முதன்முனிவர் கொண்டாடிப் போற்றிவர
இம்பரிலே யைந்தருவு மீந்துவரத் தம்பமாம் [440]
தேவர்சே னாபதியாஞ் செட்டிப் பெருமான்றேர்
தேவியே யவ்வேளை தானெய்த - ஆவலுடன்
காணாமற் போனபொருள் கண்டவர்போ லுண்மகிழ்ந்து
நாணாம லங்கே நடந்துசென்றாள் - வீணாளாய்ப்
போச்சுதே நேற்றுவரை பூங்குயிலா ரேயெனக்கும்
வாச்சுதின்றே யென்று வணங்கினாள் - பேச்சதனால்
வேதியர்கள் சொன்னதெல்லா மெய்யே குமரனென்றே
ஓதி யுணர்ந்தா ளுவப்புற்றாள் - வீதியிலே
வந்தானைப் போற்றி மகிழ்ந்தெடுத்த புட்பமெல்லாம்
சந்தாபந் தீரவே சாத்தினாள் - கொந்தாரும்
கோதை சரியமலர்க் கோதைபோ லேபணிந்தாள்

போத விரண்டுகுடம் பொன்பெற்றாள் - ஊதைக்கான்
மான்மகளைக் கூட மயங்கித் தியங்கினீர்
மான்மகளைக் கூட மயங்கிலிர் - மான்மகளைக்
கொள்ளாத கோட்டாலை கொண்டீ ரெனைமதனும்
கொள்ளாத கோட்டாலை கொள்வானேன் - வள்ளியென்னும்
கொஞ்சக் குறத்திதன்னைக் கொண்டீர் சசிவருத்தும்
கொஞ்சந் தவிர்த்தெனையுங் கொள்ளீரோ - இன்சொலவள்
வள்ளிக் கொடிச்சி வளர்கொடிச்சி வன்கொடிச்சி
வள்ளற் கொடிச்சியும் நான் வாய்ப்புக்கால் - எள்ளலறப் [450]
பெண்டுவைத்துக் கொள்வீர் பெருமையுண்டா மான்மகளைக்
கொண்டதுபோற் கொஞ்சங்கள் கூறாரே - மண்டலத்தில்
அங்கவளு மானைமக ளல்லவோ நாயடியேன்
பொங்கவனி வேந்தர் புதல்விகாண் - மஙகையவள்
பேரிளம்பெண் ணேயடியேன் பேர்பெரிய தேர்வேந்தர்
காரியமோ வீரியமோ கைக்கொள்வார் - நீரும்
மணந்தான் மயக்கமறும் வாய்முத்தந் தந்தே
அணைந்தாலென் னாசையறு மென்றாட் - கிணங்கிருவர்
தங்கள்முகம் பார்த்துத் தனிக்கிருபை மூரலே
புங்கமுடன் செய்தான் புகழ்வேலன் - வங்கணமாய்ச்
சொன்ன வெழுவருக்குஞ் சொல்லரிய மாலேறப்
பொன்னக்ரும் பன்னகரும் பூவுலகும் - நன்னகரும்
மீறி நெறியேற மிக்கசைவந் தானேற
மாறிலாச் செங்கோல் வளர்ந்தேற - ஈறிலாக்
குற்றாலம் வாழக் குழல்வாய் மொழிவாழ
வற்றா வடவருவி வாழவே - பற்றாக
மாதங்கண் மும்மழைகண் மங்காமல் வாழவே
வேதங்கண் மெய்ப்பொருள்கண் மெய்வாழ - நீதங்கள்
சீருடையார் வாழத் திருவாழத் தென்னிலஞ்சி
ஊருடையான் போந்தா னுலா. [460]

வாழ்த்து

முத்திதருங் குற்றால முற்றுமே வாழிவெற்றிச்
சத்தியணி வேன்முருகர் தாம்வாழி - எத்திசையும்
சீர்வாழி பத்தர் செயம்வாழி தென்னிலஞ்சி
ஊர்வாழி வாழி யுலா.

திரு இலஞ்சி முருகன் உலா முற்றிற்று.

இலஞ்சி முருகன் ஆலயத்தின் படங்கள்








அருள் மிகு
இலஞ்சி குமாரர் திருக்கோவில்
ஸ்ரீ சரவணா ஜவுளி ஸ்டோர். இராஜாமணி டெக்ஸ்டைல்ஸ். தென்காசி.